65

# கடலூர் மாவட்ட நிலஅளவை பதிவேடுகள் துறை உதவிஇயக்குநர் (பொ) அவர்களின்
## செயல்முறை ஆணை
### முன்னிலை திரு.து.மணிவண்ணன், MA,D.P.A.,

நாள்:28 .02.2020

நக. அ1/7494/2018

பொருள்: பொதுப்பணிகள்- நிலஅளவை பதிவேடுகள் துறை - இளநிலை உதவியாளர் இனம் பணிமாறுதல் - சிறப்பு விதி 3(ஜி) அடிப்படையில் மூலம் இளநிலை உதவியாளராக பணியேற்றது - பணிவரன்முறை செய்து ஆணை

பார்வை: 1) சென்னை, நிலஅளவை பதிவேடுகள் துறை, கூடுதல் இயக்குநர் அவர்களின் செ.மு.ஆ. நக. ர2/38645/2018(நி.அ) (1) மற்றும் (2) நாள்: 26.06.2019.

2) திருமதி.எஸ்.மகேஸ்வரி இளநிலை உதவியாளர் பணியேற்பு அறிக்கை நாள்:26.06.2019.

----

ஆணை:

பார்வை 1-ல் காணும் ஆணையின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதி 3(ஜி)-ன் அடிப்படையில், பதவி உயர்வு செய்யப்பட்டு,இளநிலை உதவியாளராக பணியேற்று பணிபுரிந்து வரும் திருமதி.எஸ். மகேஸ்வரி என்பவரது பணியினை இளநிலை உதவியாளர் இனத்தில் 26.06.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

இந்த பணிவரன்முறை நாளில் இருந்து மூன்று ஆண்டு பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவ காலம் ஆகும். இக்காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32-ல் குறிப்பிட்டுள்ளபடி பவானிசாகர் பயிற்சியில் தேர்ச்சி பெறவேண்டும். தகுதிகாண் பருவம் நிறைவு செய்த பின்னரே இரண்டாவது ஊதிய உயர்வு பெற தகுதி பெறுவார்.

(ஒம்)-து.மணிவண்ணன்,
உதவிஇயக்குநர் (பொ)
நிலஅளவை பதிவேடுகள் துறை, கடலூர்

பெறுநர்: திருமதி. எஸ்.மகேஸ்வரி,
இளநிலை உதவியாளர்.
(கண்காணிப்பாளர் I மூலமாக)

நகல்: மண்டலத்துணை இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை, சென்னை -5 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: கூடுதல் இயக்குநர், நிலஅளவைப் பதிவேடுகள் துறை, சென்னை -5 அவர்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேடு.

/உ.ந.உ.ப/

28.2.2020
கண்காணிப்பாளர்.